**அம்பலாந்தோட்டை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 3,052,538 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1994 இன் 04 ஆம் இலக்க தென் மாகாண முத்திரைக் கட்டண திருப்பும் நியதிச் சட்டத்தின் பிரகாரம் சபைக்கு கிடைக்கப்படாத முன்னைய ஆண்டுகளுக்குரிய தாமத காலம் 02 வருடங்களுக்கு மிகையான ரூபா 1,757,505 இற்கான முத்திரைக் கட்டணம் பெற வேண்டிய வருமானம் ஒன்றென மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பிரதேச சபையினால் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதி 03 காலாண்டுகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,680,918 தொகை நடைமுறை பொறுப்பொன்றென இனங்காணாமல் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு ஐந்தொகையில் காட்ட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வாகன நுகர்வுப் பண்ட இருப்பு மற்றும் நுகர்வுப் பண்ட இருப்பு முறையே ரூபா 41,751 தொகை மற்றும் ரூபா 161,274 தொகை என கூட்டுத்தொகை ரூபா 203,025 தொகையினை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இருப்பு வித்தியாசத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். | இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது ஹியூம் குழாய்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 105,000 இற்கான மூலதனச் செலவு, மீண்டுவரும் செலவு என கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நிலுவை வீதவரி மற்றும் வரி ரூபா 4,512,108 தொகையாக காணப்பட்டதுடன், அதற்குரிய வீதவரி மற்றும் வரி அட்டவணையின் படி பெறுமதி ரூபா 4,323,710 தொகையாக காணப்பட்டமையால், ரூபா 188,398 இனால் சமமின்மை காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 2,412,189 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 4,402,157 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டிற்காக 3687 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 3,350,438 இற்கான வீதவரியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவைத் தொகையில் ரூபா 403,402 தொகை அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய மீதி ஒன்றாகும். | மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் செயற்படுவேன். | நிலுவை வரி வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) ஏனைய வருமானங்கள்** | | |
| ரூபா 13 மில்லியன் தொகை செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட நோனகம வோடர்பார்க் உத்தியானம் டெண்டர் அழைத்து வாடகைக்கு கொடுப்பதற்கு செயற்படாமல் தனியார் தரப்பினருக்கு கட்டணம் அறவிட்டு படகு சேவை ஒன்று நடாத்தி சபைக்கு கொமிஷன் ஒன்று செலுத்தும் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது ரூபா 890,500 | 2022 ஆண்டு முதல் இந்த இடத்தில் இருந்து அறவிடப்படும் களியாட்ட வரி சதவீதத்தை 20% வரை அதிகரிப்பதற்கும், 2023 ஆண்டிற்காக டெண்டர் அழைத்து வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சபைக்குச் சொந்தமான ஆதனங்களில் இருந்து வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இற்கான வருமானம் ஒன்று உழைத்து அதில் 10 சதவீதத் தொகை ஒன்று சபைக்கு செலுத்தி ரூபா 801,450 தொகை தனியார் தரப்பினர் எதுவித செலவும் மேற்கொள்ளாமல் நடாத்திச் செல்வதற்காக சபையின் முகாமைத்துவத்தினால் இடமளிக்கப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு சேகரிக்கக் கூடியதாக இருந்த வருமானம் ஒன்று இழக்கக் கூடிய விதமாக செயற்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்குமாக நோயெதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கும் மருந்துத் தொகுதி ஒன்று வழங்குவதற்காக 24,000 மருந்துத் தொகுதிகள் உற்பத்தி செய்வதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 910,550 தொகைக்கான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்து 2021 ஜுன் 16 திகதி ரன்ன ஆயுர்வேத மத்திய மருந்தகத்திற்கு ஒப்படைத்த பின்னர் அந்த நிறுவனத்தில் இருந்து 4541 மருந்து பக்கெட்டுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், மீதியான 19459 பக்கெட்டுகளும் சபைக்கு கிடைத்திருக்காமையால் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ரன்ன ஆயுர்வேத மருந்தகத்தில் இருந்து சபைக்கு 4541 மருந்துத் தொகுதிகள் வழங்கப்பட்டது எனவும் மீதியான 19459 மருந்துத் தொகுதிகள் சபைக்கு விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவித்தேன். | நோய் எதிர்ப்புச் சக்தி மருந்துத் தொகுதிகள் விநியோகித்தல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 40 நடமாடும் வியாபாரக் குடில்கள் ரூபா 9,948,000 செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் நலன்பெறுவோரை இனங்கண்டு அந்த வியாபாரக் குடில்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடமாடும் வியாபாரக் குடில்கள் வழங்க வேண்டிய நலன்பெறுவோரை இனங்காணும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும், எதிர்காலத்தில் நடமாடும் வியாபாரக் குடில்கள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நலன்பெறுவோரை இனங்கண்டு விரைவாக நடமாடும் வியாபாரக் குடில்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போலான முன்பள்ளியின் மற்றும் படாத்த முன்பள்ளியின் கழிவறைகள் நிர்மாணிக்கும் இரண்டு நிர்மாண வேலைகளின் கூரைகள் செய்வதற்காக இறக்குமதி செய்வதற்காக மரங்கள் பயன்படுத்தப்பட்டதென சுட்டிக் காட்டி ரூபா 382,156 தொகை கொடுப்பனவு அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூரைக்கு பயன்படுத்தப்பட்டிருந்த மரம் இறக்குமதி செய்யப்பட்ட மரங்கள் அல்ல. | ஒப்பந்தக்காரருக்கு அந்த குறைபாட்டினை சரி செய்யும் படி அறிவுரை வழங்கப்பட்டது எனவும், அதனை சரிசெய்யாவிடின் கூரைக்கு பயன்படுத்தப்பட்ட 50x50 மில்லிமீற்றர் பலகைக்கான முழுத் தொகையும் கழித்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிர்மாண வேலை உடன்படிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட நியமங்களை உடைய மரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |